நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: கனிந்து வரும் "மா'**

First Published : 14 Dec 2010 12:00:00 AM IST
Last Updated : 14 Dec 2010 02:21:10 AM IST

உலகிலேயே அதிகளவு மாம்பழம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா மட்டுமே. ஆண்டுக்கு 125 லட்சம் டன் மாம்பழம் உற்பத்தியானபோதிலும், ஏற்றுமதி செய்யப்படும் அளவு 1 விழுக்காட்டுக்கும் குறைவு. இப்போது 83 ஆயிரம் டன்களாக இருக்கும் ஏற்றுமதி அளவு அடுத்த நிதியாண்டில் (2010-11) 90 ஆயிரம் டன்களாக உயரும் (அதாவது 8 விழுக்காடு அதிகமாக இருக்கும்) என்று அபேடா (வேளாண் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள் ஏற்றுமதி ஆணையம்) எதிர்பார்க்கிறது.

தமிழ்நாட்டில் 2001-02-ம் ஆண்டில் 1.10 லட்சம் ஹெக்டேரில் மாம்பழம் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு 4.38 லட்சம் டன்கள்தான் உற்பத்தியானது. 2006-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி 1.62 லட்சம் ஹெக்டேரில் 9 லட்சம் டன்கள்தான் உற்பத்தி செய்கிறோம். ஆனால் ஆந்திரமும், உத்தரப் பிரதேசமும் நம்மைவிட நான்கு மடங்கு உற்பத்தி செய்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தவரை முக்கனி என்று சொன்னால் அவை மா, பலா, வாழை. அந்த அளவுக்கு மாம்பழத்தின் புகழ் இருந்தாலும், இந்திய அளவில் தமிழகத்தின் உற்பத்தி என்ன என்று பார்த்தோமேயானால், முதல் 5 இடத்தில்கூட தமிழகம் இடம்பெற முடியவில்லை. ஏன் இந்த நிலை? என்றால் நம் பலத்தை நாம் அறியவில்லை அல்லது நம் தமிழர்களுக்கு அறிவிப்பார் யாருமில்லை.

பொங்கினால் புளி, மங்கினால் மாங்காய் என்பது தமிழர் வழக்கம். அதாவது மழை மிக அதிகமாகப் பெய்தால் புளி அதிகமாகக் காய்க்கும். வெயில் அதிகமாக இருந்தால் மாங்காய் மற்றும் மாம்பழ விளைச்சல் அதிகமாக இருக்கும். இந்த அளவுக்கு அனுபவ ஞானம் இருந்தாலும்கூட, மாம்பழத்துக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தானே முன்னின்று செயல்படுத்தவும் தமிழக அரசு இத்தனை காலம் தயங்கி நின்றதால் தமிழகத்திலிருந்து மாம்பழ ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் எடுபடாமலேயே போய்விட்டன.

உலகச் சந்தையில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில். உணவு மேசையில் வைக்கக்கூடிய சுவையான பழங்களில் மாம்பழமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்போது தமிழக அரசு ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அதாவது இஸ்ரேல் நாட்டின் வேளாண் துறையின் பழமரங்கள் துறை அதிகாரிகளை சேலத்துக்கு அழைத்து வந்து, அவர்களது தொழில்நுட்பத்தைச்

சொல்லித் தரும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இப்போதாகிலும் இப்படியொரு முயற்சி செய்யப்பட்டுள்ளதே என்பதற்காக தமிழக அரசைப் பாராட்டத்தான் வேண்டும்.

இஸ்ரேல் நாட்டின் வல்லுநர்கள் சேலம் மட்டுமன்றி மாம்பழம் எங்கெல்லாம் தமிழகத்தில் சாகுபடி செய்யப்படுகிறதோ அந்த இடங்களுக்குச் சென்று, விவசாயிகளிடம் இஸ்ரேலிய தொழில்நுட்ப அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவிருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு விளையும் மாம்பழத்தின் டன் அளவு அதிகரிக்கும். இப்போது தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு 5.52 டன் மாம்பழ விளைச்சல்தான் உள்ளது. இது சராசரி இந்திய அளவான ஒரு ஹெக்டேருக்கு 6.2 டன் என்பதைவிட குறைவு. இதற்குக் காரணம், மாம்பழச் சாகுபடியில் நாம் புதிய சாகுபடி முறைகளைக் கையாளத் தவறிவிட்டோம் என்பதுதான்.

இஸ்ரேலில் மொத்தம் சுமார் 2,000 ஹெக்டேரில்தான் மாம்பழச் சாகுபடி நடைபெறுகிறது என்பதும், அங்கே ஒரு ஹெக்டேருக்கு 25 முதல் 30 டன்கள் வரை மாம்பழம் விளைகிறது என்பதையும் இஸ்ரேலிய நாட்டின் வேளாண் அலுவலர்கள் சொல்லும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

அதே அளவுக்கு உற்பத்தி தமிழ் மண்ணிலும் கிடைக்கும் என்பது உறுதியில்லை. ஆனால், ஒரு ஹெக்டேருக்கு சில டன்கள் விளைச்சல் அதிகரித்தாலும்கூட, மிகப்பெரும் பொருளாதார வளர்ச்சியை மாம்பழ வியாபாரிகள் பெற முடியும். மேலும், இந்த மண்ணில் விளையும் பழங்களுக்கு அரிய சுவையும் மணமும் உள்ளது என்பதுதான் சிறப்பு. இந்தச் சிறப்பை இழக்காமல், விளைச்சலை மட்டும் மேம்படுத்தும் தொழில்நுட்பத்தைத் தேர்வு செய்யவேண்டும். மேலை நாடுகளில் உரம்போடாத மரங்களில் விளையும் பழங்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் அத்தகைய பூச்சிமருந்து இல்லா மாம்பழ உற்பத்திக்கும் ஊக்கப்படுத்த வேண்டும்.

உத்தரப் பிரதேசத்தில் விளையும் துஷேரி ரக மாம்பழம் உலக அளவில் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் அத்தகைய ஓர் அடையாளத்தை ஏற்படுத்துவதில் நாம் பின்தங்கிவிட்டோமோ என்றே தோன்றுகிறது.

உ.பி., பிகார் மாநிலங்களில் சில கிராமங்களில் இப்போதும்கூட ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்தவுடன் ஒரு மா மரம் நடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். 15 ஆண்டுகளில் அந்த மரத்தில் மாம்பழம் கிடைக்கத் தொடங்கிவிடும். அந்தப் பணத்தை அப்படியே சேமிப்பாக வைத்து, அப்பெண் குழந்தையின் கல்யாணத்தை முடித்துவிடுவதால், அந்தக் கிராமங்களில் பெண்குழந்தைகள் பிறந்தால் யாரும் கவலைப்படுவதே இல்லை என்ற செய்தியைப் படிக்கும்போது, நம் கிராமங்களில்-ஏன் இந்த நிலைமை ஏற்படவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

மாங்காயை மிக மலிவாக வாங்கி அவற்றை ரசாயனக் கல் வைத்துப் பழுக்க வைத்து சந்தையில் விற்கும் பேராசை வியாபாரிகளிடம் சிக்கியுள்ள மா சாகுபடியாளர்களுக்கு, பழமாக விற்கவும்,

பிரத்யேகமான பழ மரங்களைச் சாகுபடி செய்யவும் ஊக்கப்படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. இப்போது புதிய தொழில்நுட்பத்தைக் கைக்கொள்ளும் விவசாயிகள் பலனைக் காண்பதற்கு 10 ஆண்டுகள் ஆகலாம். ஆனால் அதற்குள்ளாக மாம்பழ ஏற்றுமதி, மாம்பழக்கூழ் தொழில்கள் பற்றிய அறிவை நம் மா சாகுபடியாளர்களிடம் ஏற்படுத்தவும் வேண்டும்.

**விவசாயிகளுக்கு இலவச இடுபொருள்கள் வழங்கல்**

First Published : 13 Dec 2010 12:10:29 PM IST

ஸ்ரீவில்லிபுத்தூர், டிச. 12: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள பாப்பையநாயக்கன்பட்டி கிராமத்தில், பருத்தி விவசாயிகளுக்கு இலவச இடுபொருள்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் நிதி உதவியுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், பாப்பையநாயக்கன்பட்டி கிராமத்தில் முதல் நிலை விளக்கத் திடல்கள் 20 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திடல்களுக்குத் தேவையான இடுபொருள்கள் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பயன்படுத்தும் முறைகள் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் என்.முருகேசன் இலவச இடுபொருள்களை வழங்கி, குறைந்த செலவில் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது குறித்து விளக்கினார்.

முன்னோடி விவசாயி ராஜூ நன்றி கூறினார்.

**பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 13 Dec 2010 11:16:05 AM IST

கரூர், டிச. 12: விவசாயிகள் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என்றார் தாந்தோன்றிமலை வட்டார வேளாண் உதவி இயக்குநர்(பொ) க. கவிதா.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் தாங்களது பயிர்களைக் காப்பீடு செய்தால், இயற்கைப் பேரிடரில் ஏற்படும் புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சிகள், நோய்களால் மகசூல் இழப்பு ஏற்படும் போதும் அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில், குத்தகைத்தாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும் (வங்கிக் கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர்) சேர்ந்து பயன்பெறலாம்.

தாந்தோன்றிமலை வட்டத்தில் 2010- 11-ம் ஆண்டில், நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் இந்தத் திட்டத்தில் சேரலாம். மேலும், இந்தத் திட்டத்தில் சேர கிராம நிர்வாக அலுவலர் சான்று தேவையில்லை.

கடன் பெறும் விவசாயிகளுக்கு, கடன் வாழங்கிய தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமே பிரிமீயத்தை கூடுதல் கடனாக அளித்து, பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அனுமதிக்கப்படுவார்கள். கடன் பெறாத விவசாயிகள், விவசாயத் துறையின் மூலம் விண்ணப்பம் பெற்று, சாகுபடி நிலத்துக்கு அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பணம் செலுத்தி காப்பீடு செய்துகொள்ளலாம்.

கடன் பெறாத விவசாயிகள் டிச.15-ம் தேதிக்குள் இந்தத் திட்டத்தில் சேரலாம். மொத்த பிரீமியத் தொகையில் 50 சதம் மட்டுமே விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும்.

அதாவது, ஏக்கருக்கு ரூ.130 மட்டுமே விவசாயிகள் செலுத்த வேண்டும். மீதித் தொகையை அரசு செலுத்தும். கடன் பெறும் விவசாயிகள் டிச.31-ம் தேதிக்குள் சேரலாம். மேலும் விவரங்களுக்கு, தாந்தோன்றிமலை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை நேரிலோ அல்லது 04324-255225 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

**விவசாயிகள் கவனத்துக்கு....**

First Published : 13 Dec 2010 11:18:06 AM IST

அரியலூர், டிச. 12: மிளகாய் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, மானிய விலையில் உரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

இதுகுறித்து அரியலூர் மாவட்டத் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராசகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், மிளகாய் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு, மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.12,500 மதிப்பில் வீரிய ஓட்டுரக மிளகாய் விதை 200 கிராம், வேப்பம்புண்ணாக்கு 100 கிலோ, 19:19:19 உரம் 15 கிலோ, பொட்டாட்சியம் நைட்ரேட் 15 கிலோ, நுண்ணூட்ட உரம் 20 கிலோ, அசோஸ்பைரில்லம் 13 கிலோ, பாஸ்பேபாக்டீரியா 32 கிலோ, கார்பரில் 1 கிலோ, கார்பன்டைசின் 1 கிலோ, இமிடாகுலோபிரிட் 250 மில்லி ஆகியவை மானியத்தில் வழங்கப்படும். எனவே, அரியலூர் மாவட்டத்தில் மிளகாய்

சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**தென்னை நலவாரியத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 13 Dec 2010 08:23:45 AM IST

நாமக்கல், டிச.12: தென்னை விவசாயிகள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக நாமக்கல் ஆட்சியர் சோ. மதுமதி தெரிவித்தார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் நலவாரியத்தில் தென்னை சாகுபடியாளர்களை உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு விண்ணப்பப் படிவம் தோட்டக் கலைத் துறை மூலம் விநியோகிக்கப்பட உள்ளது. இந்த நலவாரியத்தில் குறைந்தபட்சம் 50 தென்னை மரங்கள் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் மட்டும் உறுப்பினராக சேர முடியும்.

÷எனவே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தென்னை சாகுபடியாளர்கள், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக் கலைத் துறை அலுவலர்களை சந்தித்து உறுப்பினர் படிவத்தை இலவசமாகப் பெற்று பயனடையலாம். உறுப்பினர் சேர்க்கையின்போது விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை விண்ணப்பப் படிவத்தில் ஒட்ட வேண்டும்.

÷மற்றொரு புகைப்படத்தின் பின்னால் விண்ணப்பத்தாரரின் பெயர் எழுதி விண்ணப்பத்துடன் இணைத்திட வேண்டும். ஒரு விவசாயிக்கு ஒரு விண்ணப்பப் படிவம் என்ற விகிதத்தில்தான் படிவம் வழங்கப்படுகிறது.

÷மேலும், விவரங்களுக்கு வட்டார தோட்டக் கலைத் துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழை, வெள்ளச் சேதம்: மதிப்பிட வருகிறது மத்திய குழு**

First Published : 14 Dec 2010 12:00:00 AM IST



சென்னை, டிச. 13: தமிழகத்தில் வெள்ள பாதிப்புகளை பார்வையிட மத்திய உள்துறை இணைச் செயலாளர் விஸ்வநாதன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயர்கள் ஓரிரு நாள்களில் அறிவிக்கப்பட உள்ளது.

தமிழகத்தில் அண்மையில் பெய்த கனமழையால் பல்வேறு மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மழைக்கு 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மழை சீரமைப்புப் பணிகளுக்காக முதல் கட்டமாக ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த நிலையில், வெள்ளம் பாதித்த மாவட்டங்களைப் பார்வையிட பத்து மாவட்டங்களுக்கு தனித்தனி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

கடலூரில் ககன்தீப் சிங் பேடி, நாகை மாவட்டத்தில் சிவதாஸ் மீனா, தஞ்சையில் வி.கே.சுப்புராஜ், திருவாரூரில் ஜி.சந்தானம், விழுப்புரம் மாவட்டத்தில் ஜவஹர், நெல்லை மாவட்டத்தில் சுர்ஜித் கே. சௌத்ரி, தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்வரன் சிங்,புதுக்கோட்டை மாவட்டத்தில் டேவிதார், ராமநாதபுரத்தில் ஹன்ஸ்ராஜ் வர்மா, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனில் பாலிவால் ஆகியோர் கடந்த 5, 6-ம் தேதிகளில் நேரில் ஆய்வு செய்தனர்.

அறிக்கை அளிப்பு: வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த அவர்கள், தமிழக அரசிடம் அறிக்கை அளித்தனர். இந்த அறிக்கையின் அடிப்படையில் பாதிப்புகளைச் சீரமைக்க ரூ. 500 கோடியை தமிழக அரசு ஒதுக்கியது.

இந்த நிலையில், அதிகாரிகள் குழு மீண்டும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இப்போது ஆய்வு செய்து வருகிறது. இந்த ஆய்வைத் தொடர்ந்து அதிகாரிகள் தங்களது அறிக்கையை டிசம்பர் 17-க்குள் அளிப்பர். அதற்கு முன்னதாக, பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்துக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக ஆய்வை மேற்கொள்ள மத்தியக் குழு தமிழகம் வரவுள்ளது.

பேரிடர் நிவாரண நிதியில் இருந்து | 1,600 கோடியை மத்திய அரசிடம் இருந்து தமிழகம் கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய உள்துறை இணைச் செயலர் தலைமையில் குழு: இதனிடையே, தமிழகத்தில் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய உள்துறை இணைச் செயலாளர் விஸ்வநாதன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களின் விவரங்கள் 15-ம் தேதிக்குப் பிறகு தெரியவரும் என வருவாய்த் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய குழு டிசம்பர் 17 அல்லது 18-ம் தேதிக்குள் தமிழகம் வரும் என்றும், அப்போது மாநிலத்தின் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அளிக்கும் இரண்டாம் கட்ட ஆய்வறிக்கை குழுவிடம் அளிக்கப்படும் என்றும் தலைமைச் செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த அறிக்கையுடன், மத்திய குழுவின் ஆய்வுப் பணிகள் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இதன் அடிப்படையில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்கப்பட உள்ளது.

**திமுக வலியுறுத்தல்:** இதனிடையே, பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ப. சிதம்பரம் ஆகியோரை திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தில்லியில் திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார்.

அப்போது, "மத்திய குழுவை விரைந்து அனுப்ப வேண்டும் என்றும், இடைக்கால நிவாரணமாக | 1,600 கோடியை அளிக்க வேண்டும் எனவும்' அவர் வலியுறுத்தினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் ஓரிரு நாள்களில் மத்திய குழு அனுப்பி வைக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

தினமலர்

**இயற்கை உரத்துக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,01:55 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயற்கை உரங்கள் மூலம் மாற்று சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் 70 முதல் 80 சதவீத நிலங்கள் கிணற்று பாசனமும், மானாவாரி நிலங்களாகவும் உள்ளன. வானம் பார்த்த பூமியில் சோளம், எண்ணெய் வித்து பயிர்கள், கிழங்கு, மலர்கள், பயிறு வகை பயிர்கள் பயிர் செய்யபட்டு வருகிறது.ஏரி மற்றும் நீர் ஆதாரங்களை அடிப்படையாக கொண்ட நிலங்களில் பெரும் அளவில் நெல், வாழை, கரும்பு,

மஞ்சள் உள்ளிட்டவைகள் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழையை அடிப்படையாக கொண்டு விவசாய பணிகள் நடந்து வருகிறது.

மானாவாரி நிலங்களில் பெரும் அளவில் அந்தந்த நடப்பு முறைக்கு ஏற்பவும், மழையின் அளவினை கொண்டும் பருத்தி, பயிறு வகை பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.கடந்த செப்டம்பர், அக்டோபரில் பெய்த மழையை அடிப்படையாக கொண்டு மாவட்டத்தில் 10,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயறு வகை மற்றும் எண்ணெய்வித்து, பருத்தி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்திருந்தனர்.பருத்தி, பயறு உள்ளிட்ட ஆறு மாத பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்த நிலையில் கடந்த ஒரு மாதமாக மாவட்டத்தில் பரவலாக பெய்த மழைக்கு பல இடங்களில் விவசாய பயிர்கள் பெரும் அளவில் சேதம் அடைந்தது. குறிப்பாக குச்சிகிழங்கு, மஞ்சள், துவரை, பருத்தி உள்ளிட்ட பயிர்கள் பெரும் அளவில் சேதம் அடைந்தது. மாவட்டம் முழுவதும் 10,000 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் சேதம் அடைந்துள்ளது.பயிர்கள் ஒரு பக்கம் சேதம் அடைந்த போதும், அந்தந்த பகுதியில் உள்ள நீர் ஆதாரங்களில் மழையால் நிரம்பி வருவதால், அடுத்த கட்ட சாகுபடிக்கு தேவையான நீர் பூர்த்தி செய்யும் நிலையிருப்பதால், பாதிப்படைந்த பயிர்களை அழித்து விட்டு விவசாயிகள் மாற்று பயிர்களை சாகுபடி செய்ய அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.நீர் நிலைகளில் நீர் பெருக்கத்தால், நிலத்தடி நீர் மட்டமும் மாவட்டம் முழுவதும் உயர்ந்துள்ளது.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி கிணற்று பாசன பகுதியிலும் விவசாயிகள் நெல் நடவு, விதைப்பு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர்.பாலக்கோடு, பென்னாகரம், தர்மபுரி ஆகிய தாலுகாவில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை அழித்து விட்டு மாற்று சாகுபடியில் களம் இறங்கியுள்ள விவசாயிகள் பெரும் அளவில் இயற்கை உரங்களை அதிகம் பயன்படுத்த துவங்கியுள்ளனர். ரசாயன மருந்து, உரங்கள் தட்டுப்பாடு, விலை ஏற்றம் உள்ளிட்ட காரணங்களால் பெரும் அளவில் விவசாயிகள் இயற்கை உரங்களுக்கு மாறி வருகின்றனர்.சாண உரம் மற்றும் இலை, தழைகளை நிலத்தில் வெட்டி போட்டு நீரில் அழுக வைத்து நிலத்துக்கு இயற்கை உரங்களாக மாற்றுவதில் செலவு குறைவு என்பதால், இயற்கை உரங்களுக்கு பல விவசாயிகள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.விவசாய விளை நிலங்களுக்கு அருகில் வளர்ந்து வரும் நொச்சி செடிகள், புங்கன் இலைகள், வேப்ப இலைகள், எருக்கம் செடி உள்ளிட்டவைகளை வெட்டி வயல்வெளிகளில் நீர் நிரப்பு உழுது மண்ணோடு இலைகள் மக்கும் வரையில் நீர் பாய்ச்சி இயற்கை உரங்களை நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.தும்பலஹள்ளியை சேர்ந்த விவசாயி மூர்த்தி "நமது' நிருபரிடம் கூறும் போது, ""ரசாயன உரங்கள் மூலம் பல்வேறு தொல்லைகள் இருப்பதாலும், உரங்கள் தட்டுப்பாடு இருப்பதாலும், பழங்காலத்து இயற்கை உரங்களை பயன்படுத்துகிறோம்.

வேப்ப இலை, எருக்கம் செடிகள் வயல்களில் போடுவதால், புளு, பூச்சிகள் தொல்லைகள் குறையும். ஆனால், இந்த இலைகளை சேகரிக்க கூடுதல் நாள் செலவாகும்," என்றார்.தர்மபுரி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை அழித்து இயற்கை உரம் மூலம் புதிய சாகுபடியில் விவசாயிகள் இறங்கிருப்பதால், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

**செம்மறியாட்டினை நீலநாக்கு நோய் தாக்கும் அபாயம்: முன்னெச்சரிக்கை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,02:01 IST

வேலாயுதம்பாளையம்: செம்மறியாடுகளை நீலநாக்கு நோய் தாக்குவதில் இருந்து காப்பாற்றும் நடவடிக்கை குறித்து கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் செந்தில்வேல்அறிவித்துள்ளார். அவரது அறிக்கையில் உள்ளதாவது: செம்மறியாட்டை தாக்கும் வைரஸ் நோய்களில் முக்கியமானது, நீளநாக்கு நோய்.  செம்மறியாட்டை அதிக அளவில்தாக்கி மிகுநத பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். கரூர் மாவட்டத்தில், குறிப்பாக மார்கழி, தை மாதங்களில் அதிகமாக இந்நோய் காணப்படும் வாய்ப்புள்ளது.  கூலிகாய்டஸ் என்ற சிறு ஈக்கள் கடிக்கும் போது நோயுள்ள ஆட்டிலிருந்து வைரஸ் கிருமிகள் மற்ற ஆட்டுக்கு பரவுகிறது. இந்நோய் கிருமிகள் ஈ மற்றும் இதர ஒட்டுண்ணிகளாலும் பரவுகிறது. நோய் பாதிக்கப்பட்ட செம்மறியாடுகளில் அதிக காய்ச்சல், மூக்கில் சளி, வாய் உதடு, ஈறு மற்றும் நாக்கில் புண் போன்றவை காணப்படும். அதிக ரத்த ஓட்டம் காரணமாக நாக்கு சிவப்பு நிறத்துடன் காணப்படும். பாதிக்கப்பட்ட ஆட்டின் கால் குளம்புகளும், தோலும் சேருமிடத்தில் வீக்கம் ஏற்பட்டு கால் நொண்டுதல் ஏற்படும். கழுத்து தசை பாதிப்பால் கழுத்து ஒருபக்கமாக சாய்ந்து காணப்படும். சிலவற்றின் கால் குளம்புக்கிடையே புண், முடி கொட்டுதல் காணப்படும். நோய் பரவ காரணமாக உள்ள ஈ, கொசு போன்றவை பெருகாமல் இருக்க, நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாலை 6 மணிக்கு மேல் இந்த ஈக்கள், ஆடுகளை கடிப்பதால் ஆட்டுப்பட்டியில் வேப்பிலை, தும்பை இலை புகைமூட்டம் போட வேண்டும். ஈ உற்பத்தியாகும் இடத்தில் பூச்சிகொல்லி மருந்து தெளிக்க வேண்டும். மேலும், தகவல் அறிய கால்நடை மருந்தகம், கால்நடை ஆராய்ச்சி மையத்தை அணுகி தெரிந்து கொள்ளலாம். டெலிஃபோன் எண் 294335ல் தொடர்பு கொள்ளலாம்.

**துல்லிய பண்ணை திட்டத்தில் காய்கறி சாகுபடி; விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,02:42 IST

திருநெல்வேலி : கீழப்பாவூர் வட்டார தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்கள் துல்லிய பண்ணைத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்து காய்கறி உற்பத்தியில் அதிக மகசூல் பெறுமாறு கீழப்பாவூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; கீழப்பாவூர் வட்டார தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்கள் துல்லி பண்ணை திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்து காய்கறி உற்பத்தியில் அதிக மகசூல் பெற முடியும். இதற்காக நடப்பு 2010-11 ம்ஆண்டில் 15 ஹெக்டேர் பரப்பளவில்  துல்லிய பண்ணை திட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 60ஹெக்டேர் வரை காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காய்கறி சாகுபடி செய்யும் விவசயிகள் இத்திட்டத்தில் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர். இத் திட்டத்தில் சேரும் சொட்டு நீர் பாசன விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு அரசு மானியமாக 48 ஆயிரத்து 640ம், கரையக்கூடிய உரங்கள் மானியமாக 15ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 63 ஆயிரத்து 640 வழங்கி வருகிறது. விவசாயி செலுத்த வேண்டிய பங்குத் தொகையினை ரொக்கமாகவோ அல்லது வங்கி கடன் மூலமாகவோ பெற்று இத்திட்டத்தில் சேர்ந்து காய்கறி உற்பத்தியில் அமோக விளைச்சல் பெறலாம். இத்திட்டத்தில் காய்கறி விளைச்சல் 1.5 முதல் 2 மடங்கு வரை அதிகம் கிடைக்க வாய்ப்புள்ளது.இத்திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இது குறித்து மேலும் விவரம் அறிய விரும்பும் விவசாயிகள்  வட்டார தோட்டக்கலை துணை வேளாண்மை  அலுவலரையோ அல்லது தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர்களையோ அணுகி தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கீழப்பாவூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விளை நிலங்களில் தேங்கிய தண்ணீர் ஒரு லட்சம் வாழைகள் சேதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,01:53 IST

புதுக்கடை : பைங்குளம் மற்றும் புதுக்கடை சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 250 ஏக்கர் விளை நிலங்களில் தண்ணீர் சூழ்ந்ததால் இருண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வாழைகள் அழுகியுள்ளது. குமரியின் தென்பகுதியில் வாழை விவசாயம் அதிகமாக நடந்து வருகிறது. பைங்குளம் கிராம பஞ்., சிற்கு உட்பட்ட கொட்டாரத்து ஏலா, பைங்குளம் ஏலா, அம்சி ஏலா, அரசகுளம் ஏலாக்கள் உள்ளன. இந்த ஏலாக்களில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் நெல் விவசாயம் நடந்து வந்தது. ஆனால் தொழிலாளர்கள் கூலி அதிகரிப்பு, விளைச்சல் குறைவு போன்ற காரணங்களால் விவசாயிகள் நெல் விவசாயத்தை விட்டு வாழை விவசாயத்திற்கு இறங்கியுள்ளனர். குறிப்பாக விவசாயிகள் ஏத்தன் வாழை அதிகமாக சாகுபடி செய்கின்றனர். கேரள மக்கள்

ஓணப்பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதால் அன்றைய தினம் சிப்ஸ் மற்றும் பலகாரங்கள் செய்வதால் ஏத்தன் குலைக்கு கிராக்கி அதிகம் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு விவசாயிகள் அதிகம் ஏத்தன் வாழைகள் சாகுபடி செய்கின்றனர். அடுத்த ஆண்டு நடக்கும் ஓணப்பண்டிகையை கணக்கில் கொண்டு கடந்த மூன்று மாதத்திற்கு முன் முன்சிறை சுற்றுவட்டார பகுதி ஏலாக்களில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாழைக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. வாழைக்கன்று நட்டது முதல் சாரல் மழை பெய்யத்துவங்கியது. இதனால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தனர். தொடர்ந்து அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் வயல்கள் தண்ணீரில் மூழ்கியது. இதில் லட்சத்திற்கும் மேற்பட்ட வாழைக்கன்றுகள் தண்ணீரில் மூழ்கியது. இதனால் வாழை விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். இதுகுறித்து வாழை விவசாயி கிருஷ்ணதாஸ் கூறியதாவது: பைங்குளம் கிராம பஞ்., சிற்கு உட்பட்ட பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் வாழை விவசாயம் செய்து வருகின்றனர். இதில் பலருக்கு விவசாயம் செய்ய சொந்தமாக நிலம் இல்லை. இவர்கள் நிலம் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகின்றனர். ஓண வியாபாரத்தை கணக்கில் கொண்டு கடந்த மூன்று மாதங்களுக்கு முன் வாழை கன்றுகள் நடப்பட்டன. சராசரியாக ஒரு வாழைக்கு உரம், குத்தகை கட்டணம் என 50 ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். இந்நிலையில் அண்மையில் பெய்த கனமழையில் வாழைக்கன்றுகள் நீரில் மூழ்கி பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த நஷ்டத்திற்கான இழப்பீடு ரூபாயை தரும்படி அரசிடம் கேட்டால் நிலத்திற்கான கரம் கட்டிய ரசீதை தாருங்கள் என கேட்கின்றனர். ஆனால் நாங்கள் நிலம் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வதால் நிலத்திற்கு கரம் செலுத்தும் ரசீது இல்லை. இதனால் அரசு எங்களுக்கு மானியம் தராமல் நிலத்தின் உரிமையாளர்களுக்கு மானியம் தருகிறது. இதனால் உண்மையான விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே அரசு உண்மையான விவசாயிகளை கண்டறிந்து மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு கிருஷ்ணதாஸ் கூறினார்.

**பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுக்கும் பணி துவங்கியது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,22:48 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி துவங்கப்பட்டுள் ளது. இப்பணியை வரும் 18ம் தேதிக்குள் முடிக்க கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். கடலூர் மாவட்டத்தில் கடந்த 25ம் தேதி முதல் பெய்த அடை மழை காரணமாக 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்தது. நெல் மற்றும் மரவள்ளி உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்தன. குறிப்பாக காவிரி டெல்டா, கடலூர், குறிஞ்சிப்பாடி பகுதியில் தொடர்ந்து தேங்கி நின்ற மழை நீரால் நெற்பயிர் அழுகியது. ஒரு வாரத்தை கடந்தும் தொடர்ந்து கொள்ளிடம், வெள்ளாறு, செங்கால் ஓடை போன்றவற்றில் தண்ணீர் வரத்து

அதிகரித்து வந்ததால் தேங்கிய மழை நீர் ஒரு வாரம் வரை வடியாமல் நின்றது.  இதனால் வீடுகள் சேதமடைந்தன.  சுவர் இடிந்து, வெள்ளத்தில் மூழ்கி (பருவமழை தொடங்கியதிலிருந்து) இதுவரை 23 பேர் இறந்துள்ளனர்.   பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. மேலும் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ள குடிநீர் வடிகால் துறை இயக்குனர் ககன்தீப் சிங் பேடி நியமிக்கப்பட்டார். அவர் மாவட்டம் முழுவதும் வெள்ள சேதத்தை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பினார். அதனை அடிப்படையாகக் கொண்டு துணை முதல்வர் ஸ்டாலின் குறிஞ்சிப்பாடியில் பேசும் போது, "மாவட்டம் முழுவதும் 120 கால்நடைகள் பலியாகியுள்ளன.  2. 25 லட்சம் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதடைந்துள்ளன.  1,000 கி. மீ. , சாலை குண்டும் குழியுமாக பாதிக்கப்பட்டுள்ளன என புள்ளி விவரங்களை தெரிவித்தார்.  அதைத்தொடர்ந்து மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுப்பு நடத்த கலெக்டர் சீத்தாராமன் உத்தரவிட்டார். அதன்படி கிராம நிர்வாக அதிகாரிகள் மற்றும் அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலரைக் கொண்டு கணக்கெடுக்க வேளாண் இணை இயக்குனர் உத்தரவிட்டார்.  இப்பணி  கடந்த 13ம் தேதி துவங்கி 18ம் தேதிக்குள் முடிக்க வேண்டும்.  அதற்காக ஒவ்வொரு உதவி வேளாண் அலுவலருக்கும் 13 கிராமங்கள் வரை அந்தந்த கிராம நிர்வாக அதிகாரியுடன் கூட்டாக சேர்ந்து கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்வர்.  இவர்களோடு விருத்தாசலம் வேளாண் ஆராய்ச்சி நிலையம், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், பண்ருட்டி முந்திரி ஆராய்ச்சி நிலையம், பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பங்கேற்று பாதிக்கப்பட்ட பயிர்களை ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.  இதில் முழுவதும் சேதடைந்த பயிர் அல்லது 50 சதவீதத்திற்குமேல் சேதமடைந்த பயிருக்கு அரசு நிவாரணத் தொகை வழங்க உள்ளது.  ஆனால் 50 சதவீதத்திற்கும் குறைந்த அளவில் பாதிக்கப்பட்ட பயிருக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட மாட்டாது. அதன்படி முழுவதும் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு எக்டருக்கு 8,000 ரூபாய் வழங்க அரசு முதல் கட்டமாக அறிவித்துள்ளது.  அதே போன்று பாதிக்கப்பட்ட தோட்டக்கலை பயிர்களுக்கு இறவையாக இருந்தால் 4,000 ரூபாயும், மானாவாரியாக இருந்தால் 2,000 ரூபாயும் வழங்க அரசு அறிவித்துள்ளது.

**பயிர் மேலாண்மை விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,23:04 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த நல்லூர் மற்றும் மங்களூர் வட்டாரங்களில் வேளாண் துறை சார்பில் பயிர் மேலாண்மை விழிப்புணர்வு முகாம் நடந்தது. மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் செல்வராஜ் தலைமை தாங்கினார்.  வேளாண்மை உதவி இயக்குனர் அப்பன்ராஜ்

முன்னிலை வகித்தார். முகாமில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள், பயிர்களை உயிர்ப்பித்தல், உர மேலாண்மை, பயிர் பாதுகாப்பு போன்றவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. மேலும் நெல் பயிரைத் தாக்கும் பூச்சிகள் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. அலுவலர்கள் முகமது நிஜாம், பரமசிவம் உட்பட பங்கேற்றனர்.

**விதை பண்ணையில் வேளாண் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,23:21 IST

உளுந்தூர்பேட்டை : இருவேல்பட்டு அரசு விதைப்பண்ணையில் வேளாண் இணை இயக்குனர் திடீர் ஆய்வு செய்தார். உளுந்தூர்பேட்டை அடுத்த இருவேல்பட்டு அரசு விதைப்பண்ணையில் வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் வேளாண்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். துணை இயக்குனர் அன்பழகன், பண்ணை அலுவலர் எழில்ராஜா, உதவி இயக்குனர்கள் செல்வராஜ், துணை இயக்குனர்கள் தேவநாதன், ரவீந்திரன், எத்திராஜன், கிருஷ்ணகுமாரி உடனிருந்தனர். இணை இயக்குனர் ராமகிருஷ்ணன், ராஜராஜன் 1000, துரிதப்படுத்தப்பட்ட பயிறுவகை பெருக்கு திட்டம் போன்றவை குறித்து வேளாண் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். பின் விதை பண்ணையில் உள்ள தானியங்கி வானிலை ஆய்வு மையத்தையும், சிவாப்பட்டினத்தில் ராஜராஜன் 1000 நெல் திட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நிலங்களையும் நேரில் பார்வையிட்டார்.

**"விவசாயத்தை தொழிலாக அங்கீகரிக்க வேண்டும்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,23:33 IST

கோவை: "விவசாயத்தை தொழிலாக அங்கீகரிக்க வேண்டும்' என, விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க மாநில பொருளாளர் வேலுமணி, மாவட்ட தலைவர் பாலசுப்பிர மணியம், செயலாளர் கந்தசாமி அறிக்கை: இந்தியாவில் விவசாயம் அழிந்து, அத்தொழிலை நம்பியுள்ளவர்கள் வேறு தொழிலுக்குச் செல்ல வேண்டிய அவல நிலை தொடர்கிறது. யூரியா உரத்துக்கு வழங்கப்படும் மானியம் குறைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே மானியம் குறைக்கப்பட்டு, அதனால் உர உபயோகம் குறைந்து வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் சூழ்நிலை உருவானது. அரசு மீண்டும்

மானியத்தை உயர்த்தியது. அதுபோன்ற விஷப்பரீட்சை தற்போது தேவையற்றது. மத்திய வேளாண் அமைச்சர், "வெளிநாட்டில் நிலம் வாங்கி பருப்பு உற்பத்தி செய்யுங்கள்' என, ஆலோசனை வழங்கி உள்ளார். இந்தியா ஒரு விவசாய நாடு; வளம் மிக்க மண்ணும், சீதோஷ்ண நிலையும், தண்ணீரும் இருக்கிறது. அரசு விவசாயத்துக்கு ஆதரவான கொள்கையை வகுத்து, விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரிக்க வேண்டும். அதை விடுத்து வெளிநாட்டில் நிலம் வாங்கி, பருப்பு விவசாயம் செய்ய வேண்டும் என்ற மத்திய அமைச்சரின் கூற்று, வேடிக்கையான ஒன்று. பிரதமர், வேளாண்துறை அமைச்சரிடம் இது குறித்து விளக்கம் கோர வேண்டும். விவசாயத்தை உடனடியாக தொழிலாக அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பட்டுக்கூடுகளுக்கு வரலாறு காணாத விலை உயர்வு: உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,23:40 IST

உடுமலை: சீனாவிலிருந்து பட்டு நூலிழை இறக்குமதி மற்றும் கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தி பாதிப்பு காரணமாக வெண்பட்டுக்கூடுகளுக்கு அதிகபட்ச விலை கிடைக்கிறது. இதனால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்தியாவில் உற்பத்தியாகும் பட்டு நூலிழை, பட்டுத்துணி உற்பத்திக்கான தேவையை விட பல மடங்கு குறைவாக உள்ளது. இதனால், சீனாவிலிருந்து பல ஆயிரம் மெட்ரிக்., டன் கச்சாபட்டு இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. சீனாவிலிருந்து கச்சாபட்டு மற்றும் பட்டு நூலிழை இறக்குமதி பல்வேறு காரணங்களால் கடந்த ஓராண்டாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், உள்நாட்டில் பட்டு நூலிழை உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. பட்டு நூலிழை உற்பத்தி உள்நாட்டில் அதிகரிப்பதால் , நூல் உற்பத்திக்கு தேவையான வெண்பட்டுக்கூடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அதிக விலை கிடைக்கிறது. வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியில் கர்நாடகா முன்னிலையில் உள்ளது. இம்மாநிலத்தில் பருவநிலை மாற்றத்தால் பட்டுக்கூடு உற்பத்தி தொழில் கடந்த சில மாதங்களாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெண்பட்டுக்கூடுகளுக்கு கிராக்கி ஏற்பட்டு அதிகபட்ச விலை கிடைக்கிறது. அதிகபட்சமாக கிலோவிற்கு 250 ரூபாய் மட்டுமே கிடைத்து வந்த நிலை கடந்தாண்டே மாறியது. விலை 300 ரூபாய்க்கும் மேல் அதிகரித்து பல மாதங்களாக நிலையாக இருந்தது. கடந்த மாதம் மட்டும் விலையில் சிறிது சரிவு ஏற்பட்டு கிலோ 250 ரூபாய்க்கு மையங்களில் வெண்பட்டுக்கூடு கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக வெண்பட்டுக்கூடுகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து கிலோ 450 ரூபாய்க்கு கொள்முதல்

செய்யப்படுகிறது. பெண்ணாகரம் கொள்முதல் மையத்தில் அதிக நூற்பு திறன் கொண்ட கூடுகளுக்கு அதிகபட்சமாக 450 ரூபாயாயும், சராசரியாக 400 ரூபாயும் விலை கிடைக்கிறது. இதனால், வெண்பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோவை கொள்முதல் மையத்திலும் கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. உள்ளூர் மையங்களிலேயே கூடுகளின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தி பாதிப்பு உட்பட பல்வேறு காரணங்கள் விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது. இது குறித்து உடுமலை பகுதி உற்பத்தியாளர்கள் கூறுகையில், அனைத்து பகுதிகளிலும் தொடர்மழை காரணமாக பட்டுக்கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உடுமலை பகுதியில் பாதிப்புகள் அதிகளவு இல்லாததால் சராசரியாக நாள்தோறும் ஒரு டன் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியாகிறது. இப்பகுதியில் உற்பத்தியாகும் கூடுகள் தரத்துடன், நூற்பு திறன் அதிகம் உள்ளதாக இருப்பதால் அனைத்து மையங்களிலும் நல்ல விலை கிடைக்கிறது என்றனர்.

**கால்நடைகள் வளர்ப்பதில் சிக்கல்: விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,22:38 IST

தேனி : தேனி அருகே உள்ள பந்துவார்பட்டியில் கால்நடைகளுக்கு தண்ணீர் பிரச்னை இருப்பதால் வளர்க்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். தேனி அருகே உள்ள பந்துவார்பட்டியில் கால்நடை வளர்ப்பே முக்கிய தொழில். வீடு தோறும், ஆடு, மாடு, கோழிகளை வளர்க்கின்றனர். இங்கு சப்ளை செய்யப்படும் குடிநீர் வீடுகளுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. கால்நடைகளுக்கு போதவில்லை. சுற்றிலும் விவசாய நிலங்களாக இருப்பதால் கால்நடைகளை மேய்ச்சலுக்கும், தண்ணீர் காட்டவும் அனுமதிப்பதில்லை. இதனால் கால்நடைகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

பந்துவார்பட்டி வார்டு உறுப்பினர் மணிமேகலை கூறியதாவது: குழாயில் வரும் நீரை தொட்டிகளில் பிடித்து வைத்திருந்தால் சுகாதாரத்துறை அனுமதிப்பதில்லை. கொசுக்கள் உருவாகி விடும் எனக் கருதி கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை ஊற்றி விடுகின்றனர். பின் இந்த நீரை கால்நடைகளுக்கு கொடுக்கமுடியவில்லை. போர்வெல் போட்டு குடிநீர் சப்ளை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் போர்வெல் அமைக்கவில்லை. அமைத்து கொடுத்தால் இதில் கிடைக்கும் நீரை கால்நடைகளை வளர்க்க பொதுமக்கள் பயன்படுத்துவார்கள் என்றார்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,22:52 IST

திருப்புவனம் : திருப்புவனத்தில்  கூடுதல் விலைக்கு உரம் விற்பதால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். தற்போது வடகிழக்கு பருவ மழை பெய்துள்ளது. கண்மாய்களில் நீர் நிரம்பியுள்ளன. கிருதுமால் நதி கால்வாயிலும் கூடுதல் நீர் வரத்து உள்ளன. இதை நம்பி விவசாயிகள் நெல் நடவு பணிகளில் ஏற்கனவே ஈடுபட்டனர். தற்போது, நெற்பயிர்கள் விரைந்து வர தேவையான ஊட்டச்சத்துக்கான உரங்களை தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக, திருப்புவனம், திருப்பாச்சேத்தியில் உள்ள உரக்கடைகளில், உரம் வாங்க செல்லும் விவசாயிகள், விலையை கேட்டு அதிர்ச்சிக்கு உள்ளாகின்றனர்.

அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் உரங்கள் விற்கப்படுகிறது. இதற்கு உரிய "பில்லும்' தருவதில்லை. விலை நிர்ணயம் குறித்த விபரங்களை கேட்டால், உரம் தர மறுக்கின்றனர். விவசாயத்துறை அதிகாரிகளை உர வியாபாரிகள் "கவனித்துவிடுவதால்' கண்டுகொள்வதில்லை. விவசாயத்துறை அதிகாரிகள் உரங்களை கூடுதல் விலை, போலியான உரங்களை விற்போர் நடவடிக்கை எடுக்கப்படும் என பெயரளவில் மட்டுமே தெரிவிக்கின்றனர். நடவடிக்கை இல்லாததால், கூடுதல் விலைக்கு விற்கும் உரங்களை வாங்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

## ***தேவைப்பாடு அதிகரித்து வருவதால் பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட இதரத் துறை நிறுவனங்கள் ஆர்வம்***



ஜெய்ஸ்ரீ போஸ்லே

பூனா

இந்தியாவில் பால் மற்றும் பால் பொருள்களுக்கான தேவைப்பாடு வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது. எனவே, நம் நாட்டில், பால் பண்ணைத் தொழிலுக்கு வளமான வர்த்தக வாய்ப்பு உருவாகியுள்ளது. இதனையடுத்து, ரியல் எஸ்டேட், தகவல் தொழில்நுட்பம், சுரங்கப்பணி, கோழி வளர்ப்பு உள்ளிட்ட இதர துறைகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களும் பால் பண்ணைத் தொழிலில் களமிறங்கி வருகின்றன.

ரியல் எஸ்டேட்

இதற்கு சிறந்த உதாரணமாக, தகவல் தொழில்நுட்பம், பீ.பி.ஓ. மற்றும் ரியல் எஸ்டேட் ஆகிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் லேண்ட் மார்க் குழுமத்தை எடுத்துக்கொள்ளலாம். இக்குழுமம், பால் பண்ணைத் துறையில் களமிறங்கி பெரிய அளவில் பால் பண்ணைகளை அமைத்து வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இத்துறையில் வலுவாக காலூன்ற உள்ளது.

இது குறித்து லேண்ட் மார்க் குழுமத்தின் நிறுவனர் அமித்குமார் கூறும்போது, “நம் நாட்டில் பால் பொருள்களுக்கான தேவைப்பாடு ஆண்டுக்கு 7 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து வரும் நிலையில், விலை 20 சதவீதம் உயர்ந்து வருகிறது. எனவே, இத்துறையில் ஈடுபடுவதால், அதிக வருவாய் மற்றும் லாபம் ஈட்ட முடியும். உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும் பால் பொருள்கள் விற்பனையில் விறுவிறுப்பு ஏற்பட்டு வருகிறது. இதுபோன்ற காரணங்களால், இதர துறை நிறுவனங்களும் பால் பண்ணைத் தொழிலில் கால் பதித்து வருகின்றன” என்று தெரிவித்தார்.

மேலும், சுரங்கப் பணிகளில் ஈடுபட்டு வரும் நாரிசன்ஸ் குழுமமும் பால் பண்ணைத் தொழிலில் இறங்கி உள்ளது. இக்குழுமம், நாராயணா டெய்ரி என்ற நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. ரியல் எஸ்டேட் மற்றும் விருந்தோம்பல் துறையில் ஈடுபட்டு வரும் டைனமிக்ஸ் பால்வா என்ற நிறுவனமும் இத்துறையில் வர்த்தக நடவடிக்கைகளை தொடங்கி உள்ளது.

வாய்ப்பு

சர்வதேச அளவில், பால் பொருள்களுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருவது, நம் நாட்டு நிறுவனங்களுக்கு சாதகமான அம்சமாகும் என பரேக் மில்க் புட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தேவேந்திர ஷா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, “ஐரோப்பா மற்றும் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற

நாடுகளில் பால் பொருள்களுக்கான தேவைப்பாடு வரலாறு காணாத அளவில் அதிகரித்து வருகிறது. அதேசமயம், அந்நாடுகளில் இத்துறையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே, பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு வரும் இந்திய நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலும் வாய்ப்பு உருவாகி வருகிறது" என்று தெரிவித்தார்.

வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது, நம் நாட்டில் பால் பொருள்கள் தயாரிப்பதற்கான செலவினம் குறைவாக உள்ளது. எனவே, வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள், இந்தியாவிலிருந்து பால் பொருள்களை அதிக அளவில் கொள்முதல் செய்ய விரும்புகின்றன என்று மும்பை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் அப்துல் சமது தெரிவித்தார்.

பால் பண்ணையாளர்களிடமிருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்வதை காட்டிலும், பால் பண்ணைகளை சுயமாக உருவாக்குவதே சிறந்த வழிமுறையாகும். இதனால் கலப்படமற்ற தூய்மையான பாலை நுகர்வோருக்கு வழங்க முடியும் என்றும், வார்ணா டெய்ரி மற்றும் அக்ரோ நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி எச்.தேசாய் தெரிவித்தார். இந்நிறுவனம், 400 ஏக்கர் நிலத்தை வாங்கி அதில் 5,000 பசு மாடுகளை வளர்க்க திட்டமிட்டுள்ளது.

தனிநபர் வருவாய்

இந்தியாவில் தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருகிறது. இதனால், பொதுமக்கள் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர் தரமான பால் பொருள்களை வாங்குவதற்காக அதிக விலை கொடுக்க தயாராக உள்ளனர். இந்த வாய்ப்பை பயன்படுத்திடும் வகையில், ஐ.பீ. குழுமம் 4,000 கால்நடைகளைக் கொண்ட பால் பண்ணை ஒன்றை சத்தீஸ்கர் மாநிலத்தில் அமைத்துள்ளது.

இது குறித்து ஐ.பீ. குழுமத்தின் தலைவர் (பால் பண்ணைகள்) முகேஷ் சர்மா கூறும்போது, "நிறுவனம் தரமான பால் மற்றும் பால் பொருள்களை தயாரித்து விற்பனை செய்வதன் வாயிலாக, தேசிய அளவிலான முன்னணி பிராண்டுகளை காட்டிலும் அதிக லாபம் ஈட்டி வருகிறது" என்று தெரிவித்தார்.

குஜராத்

பால் பண்ணைத் தொழிலில் பெரிய நிறுவனங்கள் களமிறங்குவதால், இத்துறையில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும் என தேசிய பால் பண்ணை ஆராய்ச்சி பயிலகத்தின் டாக்டர் டி.கே.கோசயின் கூறினார்.

அதேசமயம், இதனால் சிறிய அளவில் பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்றை மத்திய

அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கால்நடை மருத்துவ கல்லூரி ஒன்றின் முதல்வர் கூறினார்.

இந்தியாவில் பால் மற்றும் பால் பொருள்கள் உற்பத்தியில் குஜராத் கூட்டுறவு பால் விற்பனையாளர்கள் இணையம் முதலிடத்தில் உள்ளது. இந்த அமைப்பு 'அமுல்' என்ற பிராண்டில் பால் பொருள்களை சந்தைபடுத்தி வருகிறது. இந்த அமைப்பின் சந்தை பங்களிப்பு ரூ.8,000 கோடி என்ற அளவில் உள்ளது. இந்த அமைப்பின் பால் உற்பத்தி நாள் ஒன்றிற்கு 98 லட்சம் லிட்டர் என்ற அளவில் உயர்ந்துள்ளது.

உள்நாட்டில் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, கர்நாடகா மாநிலம் பால் மற்றும் பால் பொருள்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இங்கு நாள் ஒன்றுக்கு 39 லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது.

## கோதுமை பயிரிடும் பரப்பளவில் சரிவுநிலை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு பருவத்தில் கோதுமை பயிரிடும் பரப்பளவு 3 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனையடுத்து, அடுத்த ஆண்டில் கோதுமை விலை உயர வாய்ப்புள்ளது என வேளாண் துறை ஆய்வாளர்கள் தெரிவித்தனர். அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த அடை மழை, நெல் அறுவடை தாமதமானது போன்ற பல்வேறு காரணங்களால் கோதுமை பயிராகும் மாநிலங்களில் பயிரிடும் பரப்பளவு சற்றே குறைந்துள்ளது.

குளிர் கால பயிர்

குளிர்கால (ரபி) பயிரான கோதுமை, வடமாநிலங்களில்தான் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. பயிர் பருவநிலை கண்காணிப்பு குழுவின் புள்ளிவிவரத்தின்படி, நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர் – மார்ச்) கோதுமை சாகுபடி பரப்பளவு 2.07 கோடி ஹெக்டேராக உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.13 கோடி

ஹெக்டேராக இருந்தது. ஆக, தற்போது சாகுபடி பரப்பளவு 3 சதவீதம் சரிவடைந்துள்ளது.

கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் உத்தரபிரதேச மாநிலத்தில் 4.96 லட்சம் ஹெக்டேரில்தான் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதர முக்கிய மாநிலங்களாக பஞ்சாப் மற்றும் அரியானாவுடன் ஒப்பிடுகையில் உத்தரபிரதேசத்தில் விதைப்பு பணிகள் மிகவும் தாமதமாகவே நடைபெறுகின்றன. நடப்பு பருவத்தில் அங்கு, கொள்முதல் விலை குறித்த சர்ச்சைகளால், கரும்பு சாகுபடி பணிகளும் தாமதமடைந்துள்ளன.

கடுகு சாகுபடி பரப்பளவு

ஒட்டுமொத்தத்தில், உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு 3.84 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 3.92 கோடி ஹெக்டேராக இருந்தது. எனினும் கடுகு மற்றும் பருப்பு பயிரிடும் பரப்பளவு மட்டும் உயர்ந்துள்ளது. கடுகு சாகுபடி பரப்பு 62 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 61 லட்சம் ஹெக்டேராக இருந்தது. பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 1.18 கோடி ஹெக்டேரிலிருந்து 1.22 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

கையிருப்பு

எனினும் மத்திய அரசிடம் போதிய அளவு நெல் கையிருப்பு உள்ளது.

விதிமுறைகளின்படி இவ்வாண்டு அக்டோபர் 1–ந் தேதியன்று அரசிடம் 52 லட்சம் டன் நெல் கையிருப்பு இருக்க வேண்டும். ஆனால் கையிருப்பு இதைக்காட்டிலும் அதிகமாக உள்ளது. ஜனவரி 1–ந் தேதியன்று கையிருப்பு 1.18 கோடி டன்னாக இருக்க வேண்டும். அப்போது அரசின் நெல் கையிருப்பு இதைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பொது விநியோக முறையின் கீழ் வழங்குவதற்கும், இதர சமூக நலத் திட்டங்களுக்கும் தேவையான அரிசியை தாராளமாக வழங்குவதில் சிக்கல் இருக்காது.

எனினும் கோதுமை உற்பத்தி, கையிருப்பு குறித்த மதிப்பீடுகள் திருப்திகரமாக இல்லை. இதனால் கோதுமை உள்பட பல்வேறு வேளாண் விளைபொருள்கள் மீது கட்டுப்பாடற்ற ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது, இறக்குமதி வரியை அதிகரிப்பது போன்ற அம்சங்களில் மத்திய அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய நிலை உள்ளது என வல்லுனர்கள் தெரிவித்தனர்.

## பொருளாதார வளர்ச்சி 9 சதவீதத்தை நெருங்கும் ஆலோசனை குழு தகவல்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி (ஜி.டி.பி) 9 சதவீதத்தை நெருங்கும் என்று பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் இதில் 8.5 சதவீத வளர்ச்சி ஏற்படும் என மதிப்பீடு செய்து இருந்தது.*

*கடந்த 2008–ஆம் ஆண்டில், உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார உருக்குலைவு, நம் நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நாட்டின் பொருளாதாரத்தில் 8.9 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நடப்பு ஆண்டு அக்டோபர் மாதத்தில், நாட்டின் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்து 10.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கணக்கிடுவதில் இத்துறையின் பங்களிப்பு 26.7 சதவீதமாக உள்ளது.*